3. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

4. தகவல் கோரல்

(அ) சென்னை மாநகராட்சித் தேர்தல் தொடர்பான வழக்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலிருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: **

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் வழக்கு பெண்டிங்கில் இருக்கிறது, (குறுக்கீடுகள்) வழக்கு இன்னும் பெண்டிங்கில் இருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அந்தத் தீர்ப்பில்...(குறுக்கீடுகள்) அந்தத் தீர்ப்பில் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன்; பிறகு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS